# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032,
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 669/2016/பேரு
ஆணை எண்: 202/2017
நாள்: 11/08/2017

திரு. எஸ். ஜெகன்,
முன்னாள் துணைத்தலைவர்,
உதயேந்திரம் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம். - முறையீட்டு மனுதாரர்

திரு. ஆ. செல்வராஜ்,
முன்னாள் மன்றத் தலைவர்,
உதயேந்திரம் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

## ஆணை:

வேலூர் மாவட்டம், உதயேந்திரம் பேரூராட்சி, முன்னாள் துணைத் தலைவர் திரு. எஸ். ஜெகன் என்பவரின் 20.02.2015 நாளிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க.எண்.2351/2015/இ2, நாள்:20.06.2016ன் வாயிலாக இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்டது, 11.07.2016 அன்று பெறப்பட்டு 669/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

வேலூர் மாவட்டம், உதயேந்திரம் பேரூராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர் திரு. எஸ். ஜெகன் என்பவர் தனது 20.02.2015 நாளிட்ட புகார் மனுவில் அப்பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு. ஆ. செல்வராஜ் மீது தனிப்பட்ட முறையில் ஊழல், புரிந்தது, தனது தந்தை பெயரில் ஒப்பந்தப் பணிகள் செய்தல், பேரூராட்சி மன்றக் கூட்டம் நடைபெறாதது, மன்ற உறுப்பினர்கள், மன்றக் கூட்டத்தினை / விழாவினை புறக்கணித்தது மற்றும் பிற இனங்கள் குறித்து புகார்கள் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார். மேலும் பேரூராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யவும், மற்றும் கடந்த 10 ஆண்டுகளாக பேரூராட்சியில் நடந்துள்ள

அனைத்து திட்டங்களையும், நடைபெற்ற வேலைகளையும், செலவினங்களையும் முழு விசாரணை மற்றும் தணிக்கை செய்யுமாறும் மனுதாரர் முறையீடு செய்துள்ளார்.

இம் முறையீடு குறித்து 17.11.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டு, பெறப்பட்டுள்ளது. செயல் அலுவலர் தனது 8.6.2017 நாளிட்ட விளக்க அறிக்கையில் முறையீட்டு மனுதாரரின் அனைத்து புகார்களுக்கும் தனித்தனியாக விளக்க அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:–

"...உதயேந்திரம் பேரூராட்சி மன்ற தலைவர் திரு. ஆ. செல்வராஜ் அவர்களின் தந்தை திரு.எம்.என்.ஆறுமுகம் அவர் குடும்பம் தனியாக உள்ளது. ஒப்பந்தப்பணிகள் தனியாகவே செய்து வந்தார். தலைவரின் மேல் உள்ள காழ்புணர்ச்சி காரணமாக நோட்டீஸ் அச்சிடப்பட்டுள்ளது. இந்த நோட்டீஸில் தெரிவித்துள்ள குறைபாடுகள் யாவும் உண்மைக்கு புறம்பானது.

தலைவரின் மேல் உள்ள காழ்புணர்ச்சி காரணமாக நோட்டீஸ் அச்சிடப்பட்டுள்ளது. இந்த நோட்டீஸில் தெரிவித்துள்ள குறைபாடுகள் யாவும் உண்மைக்கு புறம்பானது எனத் தெரிவித்துள்ளார்.

தலைவரின் மேல் உள்ள காழ்புணர்ச்சி காரணமாக மன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது புறக்கணித்ததால் மன்ற கூட்டம் நடத்த இயல வில்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும் தலைவரின் மேல் உள்ள காழ்புணர்ச்சி காரணமாக மன்றக் கூட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

மன்ற உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்ற பிறகே மினிட்புத்தகத்தில் தீர்மானம் எழுதப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் அவசரம் அவசியம் கருதி குடிநீர் பணிக்காக ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு இணைப்பில் உள்ளவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் மேலொப்பம் பெறப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை எனத் தெரிவித்துள்ளார்..."

மனுதாரர் முறையீட்டு மனுவில் கூறியுள்ள புகார்களுக்கு செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளது இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகாமலும் புகார் மனுவிற்குரிய விளக்கத்தினை ஆதாரங்களுடன் சமர்ப்பிக்க முன்வராததாலும், உள்ளாட்சி மன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட

பிரதிநிதிகளின் பதவிக்காலம் முடிவுற்ற நிலையிலும் செயல் அலுவலரின் விளக்க அறிக்கையினை ஏற்று மனுதாரரின் புகார் மனுவினை தள்ளுபடி செய்திட இம்முறைமன்ற நடுவம் முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11- ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்.

1. திரு. எஸ். ஜெகன்,
   முன்னாள் துணைத்தலைவர்,
   உதயேந்திரம் பேரூராட்சி,
   வேலூர் மாவட்டம் – 635 754.

2. செயல் அலுவலர்,
   உதயேந்திரம் பேரூராட்சி,
   உதயேந்திரம் - 635 754.
   வேலூர் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   குறளகம், சென்னை – 600 108.